வாயிலாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆக, அப்படி ஒரு நிலையை, அங்கே ஓர் அமைதி சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) நெடுவாசல், ஹைட்ரோகார்பன் திட்டம் நிறைவேற்றக்கூடாது என சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோரிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: நெடுவாசல் பகுதியில் நடந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு தொடர் போராட்டம். ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் சொல்வதையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன். அதில் ஒன்றும் இல்லை. நேற்றைக்கு நீங்கள் அவைக்கு வரவில்லை. (குறுக்கீடு) நேற்றைக்கு இந்த அவையில் உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் இதுசம்பந்தமாகப் பேசினார். அதன்மீது ஏறக்குறைய அரை மணிநேரம் நீண்ட விவாதம் நடந்தது. (குறுக்கீடு) என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்றைக்கு இதுசம்பந்தமாக ஒரு பெரிய விவாதம் நடந்து, அதற்குத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விரிவான பதிலை இந்த அவைக்குக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அதேமாதிரி, கதிராமங்கலம் சம்பவம் பற்றி ஏற்கெனவே இங்கு நிறைய விவாதங்கள் நடந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதற்கு என்னவென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அதை நான் சொல்ல முடியாது. (குறுக்கீடு) ஆகவே, நெடுவாசல் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நேற்றைக்கு ஒரு நீண்ட விவாதம் நடந்தது. நிறைய விவாதங்கள் நடந்தன. அதற்கு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது என்ன சொன்னார் என்றால், (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதங்கள் நீண்ட நேரம் நடந்திருக்கின்றன. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதேமாதிரி, நான் அந்த விவாதத்திற்குள் செல்ல விரும்பவில்லை. நான் கேட்கிற கோரிக்கை, உடனடியாக அதுகுறித்து, நெடுவாசல் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், 'அனுமதிக்க மாட்டோம், அனுமதிக்க மாட்டோம்' என்று அரசு சொல்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆக, சட்டமன்றத்திலே ஒரு தீர்மானமாக அதை நிறைவேற்ற இந்த அரசு முன்வர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி முன்வருகின்றபோது, எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகமும் அதற்கு முழு ஆதரவு தரக் காத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அந்த வகையில், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைகிறேன். வணக்கம்.*

முற்பகல் 11–20

(இ) மத்திய செம்மொழி தமிழ் ஆய்வு நிறுவனம், சென்னையில் தொடர்ந்து செயல்படவும், முழு நேர இயக்குநரை நியமிக்கவும் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு என்னவென்று சொல்லுங்கள். நீங்கள் சொல்லுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய செம்மொழி மத்திய தமிழ் ஆய்வு நிறுவனத்தை திருவாரூரிலே இருக்கக்கூடிய மத்திய பல்கலைக்கழகத்திலே ஒரு துறையாக மாற்ற மத்திய அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்திருப்பது தமிழக மக்களிடத்திலே ஒரு மிகப்பெரிய அதிர்வலையையும், அதிர்ச்சியையும் உருவாக்கியிருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு முன்பு பரிதிமாற் கலைஞரும், கால்டுவெல்லும் கண்ட கனவை நனவாக்கிய பெருமை தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தலைவர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தி, அதன் அடிப்படையில் 12–10–2004 அன்று அன்னை சோனியா காந்தி அவர்கள் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பொறுப்பிலே இருந்தபோது மத்திய அரசு அதற்கான ஆணையை வெளியிட்டு தமிழுக்கு செம்மொழி*

[2017 ஜூலை 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனம் சென்னை, தரமணி தமிழ்நாடு அரசு சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசால் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் பெரும்பாக்கத்தில், 17 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அந்த நிலத்தில் மத்திய அரசின் பொதுப் பணித் துறை வாயிலாக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழின் செவ்வியல் பரிணாமங்களை உலகத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் முதுபெரும் தமிழறிஞர்களும், மூத்த ஆராய்ச்சியாளர்களும் இந்நிறுவனத்தின் வழியே உயர் ஆய்வு செய்து தமிழின் பெருமைகளைப் பறைசாற்றி வருகின்றனர். இந்நிலையில், திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்துடன் செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தை இணைப்பதற்கான முயற்சி நடைபெறுவதாக இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார். மேலும், பத்திரிகைகளின் வாயிலாகவும் செய்திகளை நான் அறிந்தேன். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இதைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக் குழுத் தலைவர் என்ற முறையில் மத்திய அரசிடமிருந்து எவ்விதத் தகவலும் எனக்கோ, அல்லது தமிழக அரசுக்கோ இதுவரையில் வரப்பெறவில்லை. இதுசம்பந்தமாக மத்திய அரசிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்ற பின் தமிழ்நாடு அரசு தேவையான தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) நெடுவாசல், ஹைட்ரோகார்பன் திட்டம் நிறைவேற்றக்கூடாது என சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோரிக்கை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதற்கு, நீங்கள் நேற்றையதினம் சொன்ன பதிலையே திரும்பவும் சொல்வதாக இருந்தால், ஏற்கெனவே அவரே அதை ஒத்துக்கொண்டிருக்கிறார். நீங்களும் நேற்று பேசினீர்கள். புதிதாக ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

2017 ஜூலை 11]

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு சிறிய தகவல். அது என்னவென்று கேட்டால், ஏழு மாதங்களுக்கு முன்பு, அதாவது 30–12–2016 அன்று* GEM Laboratories Private Limited *நிறுவனத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு சிறு கனிமங்கள் மற்றும் குத்தகை அடிப்படையில்* Geology & Mining Department *இன்* licence *கேட்டிருக்கிறார்கள். இதுநாள் வரையில் ஏழு மாதங்களாக* licence *வழங்கப்படவில்லை. 9–3–2017 அன்று போராட்டத்தைக் கைவிட்டார்கள். திரும்பவும் பேராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து மாண்புமிகு பிரதமர் அவர்களை ஒரு முறை நேரிலும் சந்தித்து வந்துவிட்டார். அதற்குப் பிறகு, 30–3–2017 அன்று மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் வாயிலாகவும் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் என்றும், அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்தத் திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டுமென்றும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.*

அந்தக் கடிதத்திற்குப் பதிலாக மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்கள் 16–5–2017 அன்று கையெழுத்திட்ட கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அதாவது, மாநில அரசுக்கு, ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். அதிலே, மத்திய அரசு மாநில அரசின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்போம் என்றும், நாங்கள் உங்களது செயல்பாட்டில் கவனமாக இருக்கிறோம் என்றும், மாநில அரசு சொன்னால்தான் நாங்கள் அனுமதிப்போம், இல்லையென்றால் அனுமதிக்க மாட்டோம் என்றும் அந்த உறுதிபாட்டைக் கொடுத்திருக்கிறார். இந்த உறுதிபாட்டிற்குப் பிறகு எதற்கு இந்த அவையில் தீர்மானம் கொண்டு வரவேண்டும்? இந்தக் காரணங்களின் அடிப்படையில் மாநில அரசு மீண்டும் இத்திட்டத்திற்கு அனுமதிக்காது, அனுமதிக்காது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அனுமதிக்காது, அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில அரசின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, நாங்களும் அனுமதிக்கமாட்டோம் என்று மாண்புமிகு

மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம்மூலம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

(ஈ) தளி சட்டமன்றத் தொகுதி, Zika Virus காய்ச்சல் பரவுதலையும் மற்றும் பொள்ளாச்சி தொகுதி, கேரள மாநில எல்லையோரப் பகுதிகளில் காய்ச்சல் பரவுதலையும் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், என்னவென்று சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *கொஞ்சம் இருங்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில், தளி ஒன்றியம், நாட்ராம்பாளையம் என்ற கிராமம்* Zika virus *காய்ச்சலால் தாக்கப்பட்டிருக்கிறது. அந்த நோய் தாக்கப்பட்டவர்களை நம்முடைய* Health Secretary *அவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டிருக்கிறார். காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் காய்ச்சல் வந்திருப்பதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, அதனைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு மருத்துவக் குழுவை அமைத்து, அந்தப் பகுதி மக்களின் அச்சத்தினைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இந்தக் காய்ச்சல் ஏற்கெனவே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஒய். பிரகாஷ், போதும் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) Zika virus *நோய் தானே? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு)மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

*மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில், ஆனைமலை*